أدعية الصلاة وأذكارها
تاميل

# தொழுகையில் ஓதப்படும் துஆக்களும் திக்ருகளும்

183

جاليات

شعبة توعية الجاليات بالزلفي
هاتف: ٤٢٣٤٤٦٦ ٠٦ فاكس: ٤٢٣٤٤٧٧ ٠٦ ص.ب: ١٨٢

# أدعية الصلاة وأذكارها

أعده و ترجمه إلــى اللغة التاميلية:

## شعبة توعية الجاليات في الزلفي

الطبعة الأولى: ١/١٤٣٣ هـ.


ح شعبة توعية الجاليات بالزلفي، ١٤٣٣هـ

*فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر*

**شعبة توعية الجاليات بالزلفي**

أدعية الصلاة وأذكارها– الزلفي ، ١٤٣٣ هـ

٣١ ص؛ ١٢ × ١٧ سم

ردمك : ٠-٢٥-٨٠١٣-٦٠٣-٩٧٨

(النص باللغة التاميلية )

١-الأدعية والأوراد أ. العنوان

ديوي ٢١٢.٩٣ ١٤٣٣/٣١

رقم الإيداع : ١٤٣٣/٣١

ردمك : ٠-٢٥-٨٠١٣-٦٠٣-٩٧٨

الصف والإخراج: شعبة توعية الجاليات في الزلفي

# أدعية الصلاة وأذكارها

# தொழுகையில் ஓதப்படும் துஆக்களும் திக்ருகளும்

## உளூ செய்யும் முன்

உளூ செய்வதற்கு முன் பிஸ்மில்லாஹ் என்று கூறிக் கொள்ள வேண்டும். (அபூதாவூத் 101, நஸயீ 77)

## உளூ செய்த பின்

அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹு வஅஷ் ஹது அன்னமுஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு என ஓத வேண்டும்.

أَشْهَدُ أَنْ لا اِلٰهَ اِلّا اللهُ وَحْدَهُ لا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

(**பொருள்:** வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அவன் தனித்தவன்; அவனுக்கு யாதொரு இணையுமில்லை என்றும் முஹம்மது நபி அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் அவனது தூதரும் ஆவார்கள் என்றும் நான் சாட்சி சொல்கிறேன்.)

## பாங்கு சொல்லப்படுவதைச் செவியேற்கும் போது

முஅத்தின் சொல்வது போன்று திருப்பிச் சொல்ல வேண்டும். பிறகு நபி(ஸல்) அவர்கள் மீது ஸலவாத்து

சொல்ல வேண்டும். (முஸ்லிம் 384)

((முஅத்தின் “ஹய்ய அலஸ் ஸலா, ஹய்ய அலல் ∴பலா” என்று சொல்லும்போது நாம் “லா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ்” என்று சொல்ல வேண்டும்.) ((முஸ்லிம் 385)

**ஸலவாத்து:** அல்லாஹு ம்ம ஸல்லி அலா முஹம் மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லைத்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம் இன்ன ஹமீதுன் மஜீத் அல்லாஹு ம்ம பாரிக் அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா பாரக்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம் இன்ன ஹமீதுன் மஜீத்.

اَللّٰهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلَى إِبْرَاهِيْمَ وَعَلَى آلِ إِبْرَاهِيْمَ إِنَّكَ حمَيْدٌ مَجِيْدٌ اَللّٰهُمَّ بَارِكْ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلَى إِبْرَاهِيْمَ وَعَلَى آلِ إِبْرَاهِيْمَ إِنَّكَ حمَيْدٌ مَجِيْدٌ

(**பொருள்:** இறைவா! முஹம்மத்(ஸல்) அவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தினர் மீதும் நீ அருள் புரிவாயாக. இப்ராஹீம் (அலை) அவர்கள் மீதும் அவர்களது குடும்பத் தினர் மீதும் நீ அருள் புரிந்தது போன்று. நீ புகழுக்கும் மகத்துவத்திற்கும் உரியவன். இறைவா! முஹம்மத்(ஸல்) அவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தினர் மீதும் நீ

பரகத் செய்வாயாக. இப்ராஹீம் (அலை) அவர்கள் மீதும் அவர்க ளது குடும்பத்தினர் மீதும் நீ பரகத் செய்தது போன்று. நீ புகழுக்கும் மாட்சிமைக்கும் உரியவன்.)

ஸலவாத்திற்குப் பிறகு "அல்லாஹு்ம்ம ரப்ப ஹாதி ஹித் த.்.வதித் தாம்மதி வஸ்ஸலாத்தில் காயிமதி ஆத்தி முஹம்மதனில் வஸீலத வல்.்.பழீலத வப்அஸ்ஹு் மகாமம் மஹ்மூதனில்லதீ வஅத்தஹு்" என்று கூற வேண்டும். இவ்வாறு கூறுபவருக்கு நபி(ஸல்) அவர்களின் பரிந்துரை கிடைக்கும். (புகாரி 614)

اَللّٰهُمَّ رَبَّ هَذِهِ الدَّعْوَةِ التَّامَّةِ وَالصَّلاَةِ الْقَائِمَةِ آتِ مُحَمَّدَ ۨالْوَسِيْلَةَ

وَالْفَضِيْلَةَ وَابْعَثْهُ مَقَامًا مَحْمُوْدَ ۨالَّذِيْ وَعَدتَّهُ

(பொருள்: இறைவா! இந்த முழுமையான அழைப்பு மற்றும் நிலையான தொழுகையின் இரட்சகனே! முஹம் மத் நபி அவர்களுக்குப் பிரத்தியேக நெருக்கத்தையும் சிறப்பையும் வழங்குவாயாக. மேலும் "மகாம் மஹ்மூத்" எனும் புகழுக்குரியதோர் இடத்தில் அவர்களை எழுப்பு வாயாக. அவ்வாறே நீ வாக்குறுதி அளித்துள்ளாய்.)

**பள்ளிவாசலுக்குள் நுழையும்போது**

"அல்லாஹு்ம் ம.்.ப்தஹ்லீ அப்வாப ரஹ்மதிக"
اَللّٰهُمَّ افْتَحْ لِيْ أَبْوَابَ رَحْمَتِكَ என்று கூற வேண்டும்.

(பொருள்: இறைவா! உன் அருள் வாயில்களை எனக்காகத் திறப்பாயாக!) (முஸ்லிம் 713)

**பள்ளிவாசலை விட்டும் வெளியேறும்போது**

"அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக மின் ஃபழ்லிக" اَللَّهُمَّ إِنِّيِّ أَسْأَلُكَ مِنْ فَضْلِكَ என்று கூற வேண்டும்.

(பொருள்: இறைவா! உன் அருளை உன்னிடம் வேண்டுகிறேன்.) ((முஸ்லிம் 713)

**தொழுகைக்காக பள்ளிவாசலுக்குச் செல்லும்போது**

"அல்லாஹும் மஜ்அல் ஃபீ கல்பீ நூரன், வஃபீ லிஸானீ நூரன், வஅஜ்அல் ஃபீ ஸம்ஈ நூரன், வஅஜ் அல் ஃபீ பஸரீ நூரன், வஅஜ்அல் மின் கல்ஃபீ நூரன், வமின் அமாமீ நூரன், வஅஜ்அல் மின் ஃபவ்கீ நூரன், வமின் தஹ்தீ நூரன், அல்லாஹும்ம அஃதீனீ நூரன்" என்று கூற வேண்டும். ((முஸ்லிம் 763)

اللَّهُمَّ اجْعَلْ فِي قَلْبِي نُورًا وَفِي لِسَانِي نُورًا وَاجْعَلْ فِي سَمْعِي نُورًا وَاجْعَلْ فِي بَصَرِي نُورًا وَاجْعَلْ مِنْ خَلْفِي نُورًا وَمِنْ أَمَامِي نُورًا وَاجْعَلْ مِنْ فَوْقِي نُورًا وَمِنْ تَحْتِي نُورًا اللَّهُمَّ أَعْطِنِي نُورًا

(பொருள்: இறைவா! என் உள்ளத்தில் ஒளி வழங்கு வாயாக! என் நாவில் ஒளி வழங்குவாயாக! எனது செவி யில் ஒளி வழங்குவாயாக! எனது பார்வையில் ஒளி

வழங்குவாயாக! எனக்குப் பின்னால் ஒளி வழங்கு வாயாக! எனக்கு முன்னால் ஒளி வழங்குவாயாக! எனக்கு மேலே ஒளி வழங்குவாயாக! எனக்குக் கீழே ஒளி வழங்குவாயாக! இறைவா! எனக்கு ஒளி வழங்கு வாயாக!) **குறிப்பு:** ஒளி என்பதன் கருத்து நேர்வழி, சத்தியம் என்பதாகும்.

**தக்பீர் கூறி தொழுகையை ஆரம்பித்ததும்**

1. அல்லாஹும்ம பாஇத் பைனீ வபைன கதாயாய, கமா பாஅத்த பைனல் மஷ்ரிகி வல்ம.்.க்ரிபி, அல்லா ஹும்ம நக்கினீ மினல் கதாயா, கமா யுனக்கஸ் ஸவ்புல் அப்யலு மினத்தனஸி, அல்லாஹும் ம.்.க்ஸில் கதாயாய பில்மாயி வஸ்ஸல்ஜி வல்பரத். (புகாரி 744)

اَللَّهُمَّ بَاعِدْ بَيْنِي وَبَيْنَ خَطَايَايَ كَمَا بَاعَدْتَ بَيْنَ الْمَشْرِقِ وَالْمَغْرِبِ اَللَّهُمَّ نَقِّنِي مِنَ الْخَطَايَا كَمَا يُنَقَّى الثَّوْبُ الأَبْيَضُ مِنَ الدَّنَسِ اَللَّهُمَّ اغْسِلْ خَطَايَايَ بِالْمَاءِ وَالثَّلْجِ وَالْبَرَدِ

(**பொருள்:** இறைவா! எனக்கும் என்னுடைய தவறுக ளுக்கும் மத்தியில் நீ இடைவெளியை ஏற்படுத்துவாயாக! கிழக்கிற்கும் மேற்கிற்கும் மத்தியில் நீ இடைவெளியை ஏற்படுத்தியது போன்று! இறைவா! என்னுடைய தவறு களை விட்டு என்னைத் தூய்மைப்படுத்துவாயாக! வெண் ணிற ஆடை அழுக்கிலிருந்து தூய்மைப்படுத்தப்படுவது

போன்று! இறைவா! தண்ணீர், பனி, பனிக்கட்டி கொண்டு என் தவறுகளைக் கழுவுவாயாக!)

2. சுப்ஹானகல்லாஹு"ம்ம வபிஹம்திக வதபாரகஸ்முக வதஆலா ஜத்துக வலா இலாஹ கைருக. (அபூதாவூத் 776 திர்மிதி 243) இந்த ஹதீஸை அல்பானி சரிகண்டுள்ளார்கள்.

سُبْحَانَكَ اللَّهُمَّ وَبِحَمْدِكَ وَتَبَارَكَ اسْمُكَ وَتَعَالَى جَدُّكَ وَلَا إِلَهَ غَيْرُكَ

(**பொருள்:** இறைவா! உன்னைப் புகழ்வதுடன் துதிக்கவும் செய்கிறேன். உன் திருப்பெயர் அருட்பேருடையது. உனது ஆற்றல் மிகவும் உயர்ந்தது. உன்னைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் இல்லை.)

3. அல்ஹம்து லில்லாஹி ஹம்தன் கஸீரன் தய்யிபன் முபாரகன் ஃபீஹ். (முஸ்லிம் 600)

اَلْحَمْدُ لله حَمْداً كَثِيْرًا طَيِّبًا مُبَارَكًا فِيْهِ

(**பொருள்:** எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அருட்பேரும் அழகும் மிக்க அதிகமான புகழ் அல்லாஹ்வுக்கே!)

4. அல்லாஹு" அக்பர் கபீரா, வல்ஹம்து லில்லாஹி கஸீரா, வசுப்ஹானல்லாஹி புக்ரதன் வஅஸீலா. (முஸ்லிம் 601)

الله أَكْبَرُ كَبِيرًا وَالْحَمْدُ لله كَثِيرًا وَسُبْحَانَ الله بُكْرَةً وَأَصِيلًا

(பொருள்: அல்லாஹ் அனைத்தையும் விடப் பெரியவன்! மிகப் பெரியவன்! எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே என அதிகம் புகழ்கிறேன். காலையிலும் மாலையிலும் அல்லாஹ்வைத் தூயவன் எனத் துதிக்கிறேன்.)

5. அல்லாஹும்ம ரப்ப ஜிப்ராயீல வமீகாயீல வஇஸ்ரா.்.பீல, .்.பாத்திரஸ் ஸமாவாத்தி வல்அர்ழி, ஆலிமல் கைபி வஷ்ஷஹாததி, அன்த தஹ்குமு பைன இபாதிக, .்.பீமா கானூ .்.பீஹி யக்தலி.்.பூன, இஹ்தினீ லிமா உக்துலி.்.ப .்.பீஹி மினல் ஹக்கி பிஇத்னிக, இன்னக தஹ்தீ மன்தஷாவு இலா ஸிராத்திம் முஸ்தகீம். (முஸ்லிம் 770)

اللَّهُمَّ رَبَّ جِبْرَائِيلَ وَمِيكَائِيلَ وَإِسْرَافِيلَ فَاطِرَ السَّمَاوَاتِ وَالْأَرْضِ عَالِمَ الْغَيْبِ وَالشَّهَادَةِ أَنْتَ تَحْكُمُ بَيْنَ عِبَادِكَ فِيمَا كَانُوا فِيهِ يَخْتَلِفُونَ اهْدِنِي لِمَا اخْتُلِفَ فِيهِ مِنَ الْحَقِّ بِإِذْنِكَ إِنَّكَ تَهْدِي مَنْ تَشَاءُ إِلَى صِرَاطٍ مُسْتَقِيمٍ

(பொருள்: இறைவா! ஜிப்ரீல், மீகாயீல், இஸ்ரா.்.பீல் ஆகியோரின் இரட்சகனே! வானங்களையும் பூமியையும் படைத்தவனே! மறைவானவை, வெளிப்படையானவை அனைத்தையும் அறிந்தவனே! உன் அடியார்கள் என்னென்ன விஷயங்களில் கருத்து வேறுபாடு கொண்டுள்ளார்களோ அவற்றில் அவர்களுக்கிடையே நீதான்

தீர்ப்பளிப்பாய். சுத்தியத்தின் என்னென்ன விஷயங்களில் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதோ அவற்றில் சத்தியத் தின் பக்கம் உனது அனுமதி கொண்டு எனக்கு நேர்வழி காட்டுவாயாக! திண்ணமாக நீ யாரை விரும்புகிறாயோ அவர்களுக்கு நேர்வழி காட்டுகிறாய்.)

6. வஜ்ஜஹ்து வஜ்ஹிய லில்லதீ ப.்.தரஸ் ஸமா வாத்தி வல்அர்ழ, ஹனீ.்.பன் முஸ்லிமன் வமாஅன மினல் முஷ்ரிகீன், இன்ன ஸலாத்தீ வனுஸ்கீ வமஹ் யாய வமமாத்தி, லில்லாஹி ரப்பில் ஆலமீன், லாஷரீக் கலஹு வபிதாலிக உமிர்து வஅன மினல் முஸ்லிமீன், அல்லாஹும்ம அன்தல் மலிக்கு லாயிலாஹ இல்லா அன்த, அன்த ரப்பீ வஅன அப்துக, ழலம்து ந.்.ப்ஸீ வ.்.தர.்.ப்து பிதன்பீ, .்.பக்.்.பிர்லீ துனூபீ ஜமீஅன், இன்னஹு லா யக்.்.பிருத் துனூப இல்லா அன்த, வஹ் தினீ லிஅஹ்ஸனில் அக்லாக்கி, லா யஹ்தீ லிஅஹ்ஸ னிஹா இல்லா அன்த, வஸ்ரி.்.ப் அன்னீ ஸய்யிஅஹா, லாயஸ்ரி.்.பு அன்னீ ஸய்யிஅஹா இல்லா அன்த, லப்பைக்க வஸ.்.தைக்க, வல்கைரு குல்லுஹு .்.பீ யதைக்க, வஷ்ஷர்ரு லைஸ இலைக்க, அன பிக, வஇலைக்க, தபாரக்த வதஆலைத்த, அஸ்தக்.்.பிருக வஅதூபு இலைக்க. (மஸ்லிம் 771)

وَجَّهْتُ وَجْهِيَ لِلَّذِي فَطَرَ السَّمَاوَاتِ وَالْأَرْضَ حَنِيفًا وَمَا أَنَا مِنْ الْمُشْرِكِينَ إِنَّ صَلَاتِي وَنُسُكِي وَمَحْيَايَ وَمَمَاتِي لله رَبِّ الْعَالَمِينَ لَا شَرِيكَ لَهُ وَبِذَلِكَ أُمِرْتُ وَأَنَا مِنْ الْمُسْلِمِينَ اللَّهُمَّ أَنْتَ الْمَلِكُ لَا إِلَهَ إِلَّا أَنْتَ أَنْتَ رَبِّي وَأَنَا عَبْدُكَ ظَلَمْتُ نَفْسِي وَاعْتَرَفْتُ بِذَنْبِي فَاغْفِرْ لِي ذُنُوبِي جَمِيعًا إِنَّهُ لَا يَغْفِرُ الذُّنُوبَ إِلَّا أَنْتَ وَاهْدِنِي لِأَحْسَنِ الْأَخْلَاقِ لَا يَهْدِي لِأَحْسَنِهَا إِلَّا أَنْتَ وَاصْرِفْ عَنِّي سَيِّئَهَا لَا يَصْرِفُ عَنِّي سَيِّئَهَا إِلَّا أَنْتَ لَبَّيْكَ وَسَعْدَيْكَ وَالْخَيْرُ كُلُّهُ فِي يَدَيْكَ وَالشَّرُّ لَيْسَ إِلَيْكَ أَنَا بِكَ وَإِلَيْكَ تَبَارَكْتَ وَتَعَالَيْتَ أَسْتَغْفِرُكَ وَأَتُوبُ إِلَيْكَ

(பொருள்: வானங்களையும் பூமியையும் படைத்த இறைவனின் பக்கம் எனது முகத்தை ஒரு முகப்பட்டவனாக நான் திருப்பிவிட்டேன். மேலும் நான் இணை வைப்பவர்களைச் சேர்ந்தவனல்ல. எனது தொழுகையும் எனது குர்பானியும் எனது வாழ்வும் எனது மரணமும் அகில உலகின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே உரியனவாகும். அவனுக்கு யாதொரு இணையுமில்லை இவ்வாறே நான் ஏவப்பட்டுள்ளேன். மேலும் நான் முஸ்லிம்களில் ஒருவனாக இருக்கிறேன். இறைவா! நீயே அரசன்! வணக்கத்திற்குரியவன் உன்னைத் தவிர வேறு யாருமில்லை. நீயே என்னுடைய இரட்சகன். நான்

உனது அடிமை. எனக்கு நானே அநீதி இழைத்துக் கொண்டேன். எனது பாவத்தை நான் ஒப்புக் கொண்டேன். எனவே என் பாவங்கள் அனைத்தையும் மன்னித் தருள்வாயாக! ஏனெனில் பாவங்களை மன்னிப்பவர் உன்னைத் தவிர வேறு யாருமில்லை. மேலும் மிகச் சிறந்த குணஒழுக்கங்களின் பால் எனக்கு வழிகாட்டு வாயாக. நல்லொழுக்கங்களின் பால் வழிகாட்டுபவர் உன்னைத் தவிர வேறு யாருமில்லை. தீய குணங் களை என்னை விட்டும் அப்புறப்படுத்துவாயாக. தீய குணங்களை என்னை விட்டும் அப்புறப்படுத்துபவர் உன்னைத் தவிர வேறு யாருமில்லை. இதோ நான் வந்துவிட்டேன். ஆஜராகிவிட்டேன். நன்மைகள் யாவும் உனது கைவசத்திலேயே உள்ளன. தீமைகள் உன் பால் சேர்க்கப்படுவதில்லை. நான் உன்னோடு இருக் கிறேன்; உன் பக்கம் விரைகிறேன். நீ பாக்கியம் மிகுந் தவன்! உயர்வானவன்! நான் உன்னிடம் பாவமன் னிப்புக் கோருகிறேன். பாவ மீட்சி தேடி உன்பக்கம் மீளுகிறேன்.)

**ருகூவில் ஓத வேண்டியவை**

1. சுப்ஹான ரப்பியல் அழீம் سُبْحَانَ رَبِّيَ الْعَظِيْمِ (ஒரு தடவையேனும் அவசியம் ஓதியாக வேண்டும். அதை விடக் கூடுதலாக ஓதுவது சிறப்பு.) (முஸ்லிம் 772)

(**பொருள்:** மகத்துவமிக்க என் இறைவன் தூயவன்!)

2. சுப்ஹானகல்லாஹு‍ம்ம ரப்பனா வபிஹம்திக அல்லாஹு‍ம் ம.்.க்.்.பிர்லீ (புகாரி 4968, முஸ்லிம் 484)

سُبْحَانَكَ اَللَّهُمَّ رَبَّنَا وَبِحَمْدِكَ اَللَّهُمَّ اغْفِرْ لِيْ

(**பொருள்:** இறைவா! எங்கள் இரட்சகனாகிய உன்னைப் புகழ்வதுடன் தூயவன் எனத் துதிக்கவும் செய்கிறேன். என்னை மன்னித்தருள்வாயாக.)

3. சுப்பூஹு‍ன் குத்தூஸு‍ன் ரப்புல் மலாயிகதி வர்ரூஹ் (முஸ்லிம் 487)

سُبُّوْحٌ قُدُّوْسٌ رَبُّ الْمَلاَئِكَةِ وَالرُّوْحِ

(**பொருள்:** மலக்குகள் மற்றும் ஜிப்ரீலுடைய இறைவன் மிகவும் தூய்மையானவன்! பரிசுத்தமானவன்!)

4. சுப்ஹான தில்ஜபரூத்தி வல்மலகூத்தி வல்கிப்ரியாயி வல்அழமா (அபூதாவூத் 873)

سُبْحَانَ ذِي الْجَبَرُوْتِ وَالْمَلَكُوْتِ وَالْكِبْرِيَاءِ وَالْعَظَمَةِ

(**பொருள்:** அடக்கியாளும் திறனும் பெரும் ஆட்சியதிகாரமும் பெருமையும் மகத்துவமும் உடைய (இறை) வன் தூய்மையானவன்!) அல்பானி இதனை சரிகண்டுள்ளார்கள்.

5. அல்லாஹு‍ம்ம லக ரக.்.து வபிக ஆமன்து வலக அஸ்லம்து கஷஅ லக ஸம்ஈ வபஸரீ வமுக்கீ வஅழ்மீ வஅஸபீ. (முஸ்லிம் 771)

اَللّٰهُمَّ لَكَ رَكَعْتُ وَبِكَ آمَنْتُ وَلَكَ أَسْلَمْتُ خَشَعَ لَكَ سَمْعِيْ وَبَصَرِيْ وَمُخِّيْ وَعَظْمِيْ وَعَصَبِيْ

(பொருள்: இறைவா! நான் உனக்காகவே குனிந்தேன். உன் மீதே விசுவாசம் கொண்டேன். உனக்கே அடிபணிந்தேன். எனது செவிப்புலனும் பார்வையும் எலும்பும் எலும்பினுள் இருக்கும் மஜ்ஜையும் எனது நரம்பும் உனக்கே பயந்து பணிந்து விட்டன.)

**ருகூவிலிருந்து எழுந்ததும்**

1. ரப்பனா லகல் ஹம்து (புகாரி 722)

رَبَّنَا لَكَ الْحَمْدُ (அல்லது)

ரப்பனா வலகல் ஹம்து (புகாரி 734, முஸ்லிம் 411)

رَبَّنَا وَلَكَ الْحَمْدُ (அல்லது)

அல்லாஹு'ம்ம ரப்பனா லகல் ஹம்து

اَللّٰهُمَّ رَبَّنَا لَكَ الْحَمْدُ (புகாரி 796, முஸ்லிம் 414) (அல்லது)

அல்லாஹு'ம்ம ரப்பனா வலகல் ஹம்து (புகாரி 795)

اَللّٰهُمَّ رَبَّنَا وَلَكَ الْحَمْدُ

**(பொருள்:** எங்கள் இறைவா! எல்லாப் புகழும் உனக்கே!)

**(எச்சரிக்கை:** ஒரு சிலர் கூறுகின்ற "ரப்பனா வலகல் ஹம்து வஷ்ஷு'க்ர்" என்ற வாசகம் நபிமொழியில் கூறப் படவில்லை.)

2. அல்லாஹும்ம ரப்பனா லகல் ஹம்து மில்அஸ் ஸமாவாத்தி வமில்அல் அர்ழி வமில்அ மாஷி.்.த மின் ஷையின் பஅத் (முஸ்லிம் 476)

اَللَّهُمَّ رَبَّنَا لَكَ الْحَمْدُ مِلْءَ السَّمَوَاتِ وَمِلْءَ الأَرْضِ وَمِلْءَ مَا شِئْتَ مِنْ شَيْءٍ بَعْدُ

(**பொருள்:** இறைவா! புகழ் அனைத்தும் உனக்கே. வானங்கள் நிரம்ப, பூமி நிரம்ப, அதற்குப் பிறகு நீ விரும்பும் அத்தனை பொருட்கள் நிரம்ப!)

3. ரப்பனா லகல் ஹம்து மில்அஸ் ஸமாவாத்தி வமில் அல்அர்ழி, வமில்அ மாஷி.்.த மின் ஷையின் பஅது, அஹ்லஸ் ஸனாயி வல்மஜ்தி, அஹக்கு மாகாலல் அப்து, வகுல்லுனா லக அப்துன். அல்லாஹும்ம லாமானிஅ லிமா அ.்.தய்த்த, வலா மு.்.திய லிமா மன.்.த, வலா யன்.்.பவு தல் ஜத்தி, மின் கல் ஜத்து. (முஸ்லிம் 477)

رَبَّنَا لَكَ الْحَمْدُ مِلْءَ السَّمَوَاتِ وَمِلْءَ الأَرْضِ وَمِلْءَ مَا شِئْتَ مِنْ شَيْءٍ بَعْدُ أَهْلَ الثَّنَاءِ وَالمَجْدِ أَحَقُّ مَا قَالَ الْعَبْدُ وَكُلُّنَا لَكَ عَبْدٌ اَللَّهُمَّ لاَ مَانِعَ لِمَا أَعْطَيْتَ وَلاَ مُعْطِيَ لِمَا مَنَعْتَ وَلاَ يَنْفَعُ ذَاالْجَدِّ مِنْكَ الْجَدُّ

(**பொருள்:** இறைவா! புகழ் அனைத்தும் உனக்கே. வானங்கள் நிரம்ப, பூமி நிரம்ப, அதற்குப் பிறகு நீ விரும்பும் அத்தனை பொருட்கள் நிரம்ப! புகழுக்கும்

கீர்த்திக்கும் உரியவன் நீ! இது அடியான் கூறுவதற்கு மிகவும் தகுதிவாய்ந்ததாகும். நாங்கள் அனைவரும் உனக்கு அடிமைகளே. இறைவா! நீ கொடுத்ததைத் தடுப்பவர் எவருமில்லை. நீ தடுத்ததைக் கொடுப்பவர் எவருமில்லை. செல்வாக்குடைய எவரையும் அவரது செல்வாக்கு உன் தண்டனையிலிருந்து காத்திட முடியாது. எந்தப் பயனும் அளிக்கமாட்டார். மதிப்பு உன்னிடமே உள்ளது.)

4. ரப்பனா வலகல் ஹம்து ஹம்தன் கஸீரன் தய்யிபன் முபாரகன் ஃபீஹ் (புகாரி 799)

رَبَّنَا وَلَكَ الْحَمْدُ حَمْدًا كَثِيْرًا طَيِّبًا مُبَارَكًا فِيْهِ

(பொருள்: எங்கள் இறைவா! புகழ் அனைத்தும் உனக்கே. அருட்பேறும் அழகும் மிக்க அதிகமான புகழ்!)

**ஸுஜூதில் ஓத வேண்டியவை**

1. சுப்ஹான ரப்பியல் அஃலா سُبْحَانَ رَبِّيَ الْأَعْلَى

(ஒரு தடவையேனும் அவசியம் ஓதியாக வேண்டும். அதை விடக் கூடுதலாக ஓதுவது சிறப்பு.) (முஸ்லிம் 772)

(பொருள்: மிக உயர்ந்தவனாகிய என் இறைவன் தூயவன்)

2. சுப்ஹானகல்லாஹும்ம ரப்பனா வபிஹம்திக அல்லாஹும் மஃக்ஃபிர்லீ (புகாரி 4968, முஸ்லிம் 484)

سُبْحَانَكَ اَللّٰهُمَّ رَبَّنَا وَبِحَمْدِكَ اَللّٰهُمَّ اغْفِرْ لِيْ

(பொருள்: இறைவா! எங்கள் இரட்சகனாகிய உன்னைப் புகழ்வதுடன் தூயவன் எனத் துதிக்கவும் செய்கிறேன். என்னை மன்னித்தருள்வாயாக.)

3. சுப்பூஹுன் குத்தூஸுன் ரப்புல் மலாயிகதி வர்ரூஹ் (முஸ்லிம் 487)

سُبُّوْحٌ قُدُّوْسٌ رَبُّ الْمَلاَئِكَةِ وَالرُّوْحِ

(பொருள்: மலக்குகள் மற்றும் ஜிப்ரீலுடைய இறைவன் மிகவும் தூய்மையானவன்! பரிசுத்தமானவன்!)

4. சுப்ஹான தில்ஜபரூத்தி வல்மலகூத்தி வல்கிப்ரியாயி வல்அழமா (அபூதாவூத் 873)

سُبْحَانَ ذِي الْجَبَرُوْتِ وَالْمَلَكُوْتِ وَالْكِبْرِيَاءِ وَالْعَظَمَةِ

(பொருள்: அடக்கியாளும் திறனும் பெரும் ஆட்சியதிகாரமும் பெருமையும் மகத்துவமும் உடைய (இறை)வன் தூய்மையானவன்!) அல்பானி இதனை சரிகண்டுள்ளார்கள்.

5. அல்லாஹும்ம ஃக்ஃபிர்லீ தன்பீ குல்லஹு திக்கஹு வஜில்லஹு வஅவ்வலஹு வஆகிரஹு வஅலானிய்யதஹு வஸிர்ரஹு (முஸ்லிம் 483)

اَللّٰهُمَّ اغْفِرْ لِيْ ذَنْبِيْ كُلَّهُ دِقَّهُ وَجِلَّهُ وَأَوَّلَهُ وَآخِرَهُ وَعَلاَنِيَّتَهُ وَسِرَّهُ

(பொருள்: இறைவா! என் பாவம் அனைத்தையும்- சிறிய, பெரிய, முந்தைய, பிந்தைய வெளிப்டையான, இரகசியமான என எல்லாப் பாவங்களையும் மன்னித் தருள்வாயாக.)

6. அல்லாஹும்ம லக ஸஜத்து வபிக ஆமன்து வலக அஸ்லம்து ஸஜத வஜ்ஹீ லில்லதீ கலகஹு வஸவ் வரஹு வஷக்க ஸம்அஹு வபஸரஹு தபாரகல்லாஹு அஹ்ஸனுல் காலிகீன். ((முஸ்லிம் 771)

اَللَّهُمَّ لَكَ سَجَدْتُ وَبِكَ آمَنْتُ وَلَكَ أَسْلَمْتُ سَجَدَ وَجْهِيْ لِلَّذِيْ خَلَقَهُ وَصَوَّرَهُ وَشَقَّ سَمْعَهُ وَبَصَرَهُ تَبَارَكَ اللهُ أَحْسَنُ الْخَالِقِيْنَ

(பொருள்: இறைவா! நான் உனக்காகவே சிரம்பணிந் தேன். உன் மீதே விசுவாசம் கொண்டேன். உனக்கே அடிபணிந்தேன். எனது முகம்-அதனைப் படைத்து அதன் தோற்றத்தை அமைத்து அதன் கண்களுக்கும் காதுக ளுக்கும் வழி அமைத்துத் தந்த (இறை)வனுக்கு பணிந்து விட்டது. படைப்பாளர்கள் அனைவரிலும் சிறந்தவனான அல்லாஹ் அருட்பாக்கியம் உடையவனாவான்.)

7. அல்லாஹும்ம இன்னீ அவூது பிரிழாக மின் ஸகதிக, வபி முஆ.ீபாதிக மின் உகூபதிக, வஅவூது பிக மின்க, லா உஹ்ஸீ ஸனாஅன் அலைக்க, அன்த கமா அஸ்னைத்த அலா ந.ீப்ஸிக

اَللَّهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِرِضَاكَ مِنْ سَخَطِكَ وَبِمُعَافَاتِكَ مِنْ عُقُوْبَتِكَ وَأَعُوْذُ بِكَ مِنْكَ لاَ أُحْصِيْ ثَنَاءً عَلَيْكَ أَنْتَ كَمَا أَثْنَيْتَ عَلَى نَفْسِكَ

(**பொருள்:** இறைவா! உனது திருப்பொருத்தத்தைக் கொண்டு உனது கோபத்தை விட்டும், உனது மன்னிப்பைக் கொண்டு உனது தண்டனையை விட்டும் உன்னைக் கொண்டு உன் அனைத்து தீங்கை விட்டும் நான் பாதுகாப்புத் தேடுகிறேன். உன்னை முழுமையாகப் புகழ்ந்திட என்னால் இயலாது. நீயே உன்னைப் புகழ்ந்தது போன்று முழுப் புகழுக்கு உரியவனாக நீ இருக்கின்றாய்.) (முஸ்லிம் 486)

**குறிப்பு:** ஸுஜூதில் அதிகமதிகம் துஆ செய்வது சுன்னத்தாகும். ஏனெனில "ஒரு அடியான் தன் இறைவனுக்கு மிக நெருக்கமாக இருப்பது அவன் ஸஜ்தாவில் இருக்கும்போதுதான்" என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (முஸ்லிம் 482)

**இரண்டு ஸஜ்தாக்களுக்கு இடையில்**

1. ரப்பிக் ஃபிர்லீ, ரப்பிக் ஃபிர்லீ رَبِّ اغْفِرْ لِي رَبِّ اغْفِرْ لِي (அபூதாவூத் 897)

(**பொருள்:** என் இரட்சகனே! என்னை மன்னித்தருள்வாயாக! என் இரட்சகனே! என்னை மன்னித்தருள்வாயாக!) அல்லானி இதனை சரிகண்டுள்ளார்கள்.

2. அல்லாஹு"ம் மக்.'.பிர்லீ வர்ஹம்னீ வஆ.'.பினீ வஹ்தினீ வர்ஸு"க்னீ (அபூதாவூத் 850)

اللَّهُمَّ اغْفِرْ لِي وَارْحَمْنِي وَعَافِنِي وَاهْدِنِي وَارْزُقْنِي

(**பொருள்:** இறைவா! என்னை மன்னிப்பாயாக! எனக்கு அருள் புரிவாயாக! எனக்கு ஆரோக்கியம் வழங்கு வாயாக! எனக்கு நேர்வழிகாட்டுவாயாக! எனக்கு உண வளிப்பாயாக!) அல்பானி இதனை சரிகண்டுள்ளார்கள்.

**அத்தஹிய்யாத்து**

அத்தஹிய்யாத்து லில்லாஹி வஸ்ஸலவாத்து வத்தய் யிபாத்து அஸ்ஸலாமு அலைக அய்யுஹன் நபிய்யு வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு" அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன். அஷ்ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹு" வஅஷ்ஹது அன்ன முஹம் மதன் அப்துஹு" வரஸு"லுஹு" (புகாரி 831) பிறகு பின்வரும் ஸலவாத்தைக் கூற வேண்டும்.

அல்லாஹு"ம்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலிமுஹம்மதின் கமா ஸல்லைத அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்னக ஹமீதும் மஜீத். அல்லாஹு"ம் பாரிக் அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா பாரக்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்னக ஹமீதும் மஜீத். (புகாரி 3370)

اَلتَّحِيَّاتُ للهِ وَالصَّلَوَاتُ وَالطَّيِّبَاتُ اَلسَّلاَمُ عَلَيْكَ أَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللهِ وَبَرَكَاتُهُ اَلسَّلاَمُ عَلَيْنَا وَعَلَى عِبَادِ اللهِ الصَّالِحِيْنَ أَشْهَدُ أَنْ لاَإِلَهَ إِلاَّ اللهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّداً عَبْدُهُ وَرَسُوْلُهُ،

اَللَّهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلَى إِبْرَاهِيْمَ وَعَلَى آلِ إِبْرَاهِيْمَ إِنَّك حَمِيْدٌ مَجِيْدٌ اَللَّهُمَّ بَارِكْ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلَى إِبْرَاهِيْمَ وَعَلَى آلِ إِبْرَاهِيْمَ إِنَّك حَمِيْدٌ مَجِيْدٌ

இது அல்லாமல் ஒரு சில மாற்றத்துடன் வேறு அத்தஹிய்யாத்தும் ஹதீஸ்களில் வந்துள்ளன.

(பொருள்: காணிக்கைகள், வணக்கங்கள் மற்றும் நற்பணிகள் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியன வாகும். நபியே! அமைதியும் அல்லாஹ்வின் கருணையும் அருட்பேருகளும் உங்கள் மீது உண்டாகட்டும். எங்கள் மீதும் அல்லாஹ்வின் நல்லடியார்கள் மீதும் அமைதி உண்டாகட்டும். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்றும் முஹம்மது நபி அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் தூதரும் ஆவார்கள் என்றும் நான் சாட்சியம் கூறுகிறேன்.

இறைவா! முஹம்மது நபி(ஸல்)அவர்கள் மீதும் அவர் களின் வழிவந்தவர்கள் மீதும் கருணை பொழிவாயாக!

இப்ராஹீம் நபி மீதும் அவர்களின் வழி வந்தவர்கள் மீதும் நீ கருணை பொழிந்தது போன்று. நிச்சயமாக நீ புகழுக்கும் மகத்துவத்திற்கும் உரியவன். இறைவா! முஹம்மது நபி(ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் வழி வந்தவர்கள் மீதும் அருட்பேருகள் பொழிவாயாக! இப்ராஹீம் நபி மீதும் அவர்களின் வழி வந்தவர்கள் மீதும் நீ அருட்பேருகள் பொழிந்தது போன்று. நிச்சய மாக நீ புகழுக்கும் மகத்துவத்திற்கும் உரியவன்.)

**அத்தஹிய்யாத்திற்குப் பிறகு- ஸலாம் கொடுப்பதற்கு முன் ஓத வேண்டியவை**

1. அல்லாஹும்ம இன்னீ அவூதுபிக மின் அதாபி ஜஹன்னம, வமின் அதாபில் கப்ரி, வமின் ஃபித்னதில் மஹ்யா, வல்மமாத்தி, வமின் ஷர்ரி ஃபித்னதில் மஸீஹித் தஜ்ஜாலி. (முஸ்லிம் 588)

اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ عَذَابِ جَهَنَّمَ وَمِنْ عَذَابِ الْقَبْرِ وَمِنْ فِتْنَةِ الْمَحْيَا وَالْمَمَاتِ وَمِنْ شَرِّ فِتْنَةِ الْمَسِيحِ الدَّجَّالِ (م/ ٥٨٨)

(**பொருள்:** இறைவா! நரகின் வேதனையிலிருந்தும், மண்ணறையின் வேதனையிலிருந்தும், வாழ்க்கை மற்றும் மரணத்தின் குழப்பத்திலிருந்தும், தஜ்ஜாலு டைய குழப்பத்தின் கெடுதியிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்.)

2. அல்லாஹு'ம் இன்னீ ழலம்து ந.ஃப்ஸீ ழுல்மன் கஸீரன், வலா யக்.ஃபிருத் துனூப இல்லா அன்த, .ஃபக் .ஃபிர்லீ மக்.ஃபிரதன் மின் இன்திக வர்ஹம்னீ, இன்னக அன்தல் க.ஃபூருர் ரஹீம்.

اَللَّهُمَّ إِنِّيْ ظَلَمْتُ نَفْسِيْ ظُلْمًا كَثِيْرًا وَلاَ يَغْفِرُ الذُّنُوْبَ إِلاَّ أَنْتَ فَاغْفِرْ لِيْ

مَغْفِرَةً مِنْ عِنْدِكَ وَارْحَمْنِيْ إِنَّكَ أَنْتَ الْغَفُوْرُ الرَّحِيْمِ

**(பொருள்:** இறைவா! எனக்கு நானே அதிக அளவு அநீதியிழைத்து விட்டேன். பாவங்களை மன்னிப்பவர் உன்னைத் தவிர வேறு யாரும் இல்லை. எனவே உனது பிரத்தியேக மன்னிப்பில் என்னை மன்னித்தருள்வாயாக. நீ மிகவும் மன்னிப்பவனும் மிகக் கருணை உள்ளவனும் ஆவாய். (புகாரி 834, முஸ்லிம் 2705)

3. அல்லாஹு'ம் ம.ஃக்.ஃபிர்லீ மா கத்தம்து, வமா அக்கர்து, வமா அஸ்ரர்து, வமா அ.ஃலன்து வமா அஸ்ர.ஃப்து, வமா அன்த அ.ஃலமு பிஹி மின்னீ, அன்தல் முகத்திமு வஅன்தல் முஅக்கிரு லாஇலாஹ இல்லா அன்த. (முஸ்லிம் 771)

اَللَّهُمَّ اغْفِرْ لِيْ مَا قَدَّمْتُ وَمَا أَخَّرْتُ وَمَا أَسْرَرْتُ وَمَا أَعْلَنْتُ وَمَا أَسْرَفْتُ

وَمَا أَنْتَ أَعْلَمُ بِهِ مِنِّيْ أَنْتَ الْمُقَدِّمُ وَأَنْتَ الْمُؤَخِّرُ لاَإِلَهَ إِلاَّ أَنْتَ

(பொருள்: இறைவா! நான் முன்னர் செய்தவற்றையும் பின்னர் செய்தவற்றையும் இரகசியமாய்ச் செய்தவற் றையும் பகிரங்கமாய்ச் செய்தவற்றையும் வரம்புமீறிச் செய்தவற்றையும் மேலும் எந்தப் பாவங்களை என்னை விட நீ அதிகம் அறிந்துள்ளாயோ அந்தப்பாவங்களை யும் நீ மன்னிப்பாயாக. நாடியவர்களை முன்னுக்குக் கொண்டு வருபவனும் நீயே. பின்னுக்குத் தள்ளுபவனும் நீயே. வணக்கத்திற்குரியவன் உன்னைத் தவிர வேறு யாருமில்லை.)

4. அல்லாஹு'ம் இன்னீ அவூதுபிக மினல் அஜ்ஸி வல்கஸல், வல்ஜு'ப்னி வல்புக்லி வல்ஹரம், வஅவூது பிக மின்அதாபில் கப்ரி, வஅவூதுபிக மின்.˙.பித்னதில் மஹ்யா வல்மமாத்தி,

اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ الْعَجْزِ وَالْكَسَلِ وَالْجُبْنِ وَالْبُخْلِ وَالْهَرَمِ وَأَعُوذُ بِكَ مِنْ عَذَابِ الْقَبْرِ وَأَعُوذُ بِكَ مِنْ فِتْنَةِ الْمَحْيَا وَالْمَمَاتِ

(பொருள்: இறைவா! இயலாமை, சோம்பல், கோழைத் தனம், கருமித்தனம், முதுமை ஆதிக்கம் ஆகியவற்றை விட்டும் உன்னிடம் காவல் தேடுகிறேன். இன்னும் மண்ண றையின் வேதனையை விட்டும் வாழ்க்கை மற்றும் மரணத் தின் குழப்பத்தை விட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடு கிறேன்.) (புகாரி 6367)

**ஸலாமுக்கு முன் அதிகம் துஆ செய்தல்**

நபி (ஸல்) அவர்கள் அத்தஹிய்யாத்தைப் பற்றிக் கற்றுத் தரும்போது "பிறகு தாம் விரும்பிய பிரார்த்தனையைத் தேர்வு செய்து பிரார்த்திக்கட்டும்" என்று கூறியுள்ளார்கள். (புகாரி 835)

**தொழுகைக்குப் பிறகு ஓத வேண்டிய திக்ருகள்**

1. அஸ்த.்.க்பிருல்லாஹ், அஸ்த.்.க்.்.பிருல்லாஹ், அஸ்த.்.க்.்.பிருல்லாஹ், அல்லாஹும்ம அன்தஸ்ஸலாம் வமின்கஸ்ஸலாம் தபாரக்த யாதல் ஜலாலி வல்இக்ராம்.

أَسْتَغْفِرُ اللهَ أَسْتَغْفِرُ اللهَ أَسْتَغْفِرُ اللهَ ، اَللَّهُمَّ أَنْتَ السَّلاَمُ وَمِنْكَ السَّلاَمُ

تَبَارَكْتَ يَاذَا الْجَلاَلِ وَلإِكْرَامِ

(**பொருள்:** அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடுகிறேன். இறைவா! நீ எல்லாக் குறைகளை விட்டும் பாதுகாப்பு பெற்றவன். உன்னிடமிருந்தே பாதுகாப்பு ஏற்படுகின்றது. மதிப்பும் மகத்துவமும் மிக்கவனே! நீ உயர்ந்து விட்டாய்!) (முஸ்லிம 591)

2. லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்க லஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷையின் கதீர். அல்லாஹும்ம லாமானிஅ லிமா அ.்.தைத்த வலா மு.்.திய லிமா மன.்.த வலா யன்.்.பஉ தல்ஜத்தி மின்கல் ஜத். (புகாரி 844, முஸ்லிம் 593)

لاَإِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَشَرِيْكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ
اَللَّهُمَّ لاَ مَانِعَ لِمَا أَعْطَيْتَ وَلاَ مُعْطِيَ لِمَا مَنَعْتَ وَلاَ يَنْفَعُ ذَاالْجَدِّ مِنْكَ الْجَدُّ

(பொருள்: வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணை யாருமில்லை. ஆட்சி அவனுக்கே உரியது! புகழும் அவனுக்கே! அவன் அனைத்துப் பொருட்களின் மீதும் ஆற்றலுடையவன். இறைவா! நீ கொடுப்பதைத் தடுப்பவர் எவருமில்லை. நீ தடுப்பதைக் கொடுப்பவர் எவருமில்லை. செல்வம் உடையவர் எவரையும் அவரது செல்வம் உனது தண்டனையிலிருந்து காத்திட முடியாது.)

3. லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக் கலஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலாகுல்லி ஷையின் கதீர். லாஹவ்ல வலாகுவ்வத இல்லா பில்லாஹ். லாயிலாஹ இல்லல்லாஹு வலா ந..புது இல்லா இய்யாஹு லஹுன் நி..மது வலஹுல் ..பழ்லு வலஹுஸ் ஸனாவுல் ஹஸனு லாயிலாஹ இல்லல்லாஹு முக்லிஸீன லஹுத்தீன வலவ் கரிஹல் கா..பிரூன். (முஸ்லிம் 594)

لاَإِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَشَرِيْكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ
قَدِيْرٌ لاَ حَوْلَ وَلاَ قُوَّةَ إِلاَّ بِاللهِ لاَإِلَهَ إِلاَّ اللهُ وَلاَ نَعْبُدُ إِلاَّ إِيَّاهُ لَهُ النِّعْمَةُ

وَلَهُ الْفَضْلُ وَلَهُ الثَّنَاءُ الْحَسَنُ لاَإِلَهَ إِلاَّ اللهُ مُخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ وَلَوْ كَرِهَ الْكَافِرُوْنَ

(பொருள்: வணக்கத்திற்குரியவன அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணை யாருமில்லை. ஆட்சி அவனுக்கே உரியது! புகழும் அவனுக்கே! அவன் அனைத்துப் பொருட்களின் மீதும் ஆற்றலுடையவன். அல்லாஹ்வின் துணையின்றி நல்லவற்றைச் செய்யவோ தீயவற்றிலிருந்து விலகவோ இயலாது. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அவனைத் தவிர வேறு எவரையும் நாங்கள் வணங்கமாட்டோம். அருட்கொடை அவனுக் குரியது. பேருபகாரமும் அவனுக்குரியது. அழகிய புகழும் அவனுக்குரியது. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு எருமில்லை. நிராகரிப்போர் விரும்பா விட்டா லும் வணக்கங்களை அவனுக்கு மட்டுமே கலப்பற்ற முறையில் செய்வோம்.)

4. பிறகு சுப்ஹானல்லாஹ் 33 தடவை, அல்ஹம்து லில்லாஹ் 33 தடவை, அல்லாஹு அக்பர் 33 தடவை. பிறகு நூறாகப் பூர்த்தி செய்ய "லாயிலாஹ இல்லல் லாஹு வஹ்தஹு லாஷரீக் கலஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலாகுல்லி ஷையின் கதீர்" என ஒரு தடவை கூற வேண்டும். (முஸ்லிம் 597)

## ஜனாஸா தொழுகையில் மய்யித்துக்காக துஆ செய்தல்

அல்லாஹும்ம ம.்.க்.்.பிர்லஹு வர்ஹம்ஹு வஆ.்.பிஹி வ.்.பு அன்ஹு வஅக்ரிம் நுஸ்லஹு வவஸ்ஸி.்.முத்க லஹு வ.்.க்ஸில்ஹு பில்மாயி வஸ்ஸல்ஜி வல்பரத், வநக்கிஹி மினல் கதாயா கமா நக்கைதஸ் ஸவ்பல் அப்யழ மினத் தனஸ், வஅப்தில்ஹு தாரன் கைரன் மின் தாரிஹி, வஅஹ்லன் கைரன் மின் அஹ்லிஹி, வஸவ்ஜன் கைரன் மின் ஸவ்ஜிஹி வஅத்கில்ஹுல் ஜன்னத வஅஇத்ஹு மின் அதாபில் கப்ரி அவ் மின் அதாபின்னார். ((முஸ்லிம் 963)

اَللَّهُمَّ اغْفِرْ لَهُ وَارْحَمْهُ وَعَافِهِ وَاعْفُ عَنْهُ وَأَكْرِمْ نُزُلَهُ وَوَسِّعْ مُدْخَلَهُ وَاغْسِلْهُ بِالْمَاءِ وَالثَّلْجِ وَالْبَرَدِ وَنَقِّهِ مِنَ الْخَطَايَا كَمَا نَقَّيْتَ الثَّوْبَ الْأَبْيَضَ مِنَ الدَّنَسِ وَأَبْدِلْهُ دَارًا خَيْرًا مِنْ دَارِهِ وَأَهْلاً خَيْرًا مِنْ أَهْلِهِ وَزَوْجًا خَيْرًا مِنْ زَوْجِهِ وَأَدْخِلْهُ الْجَنَّةَ وَأَعِذْهُ مِنْ عَذَابِ الْقَبْرِ أَوْ مِنْ عَذَابِ النَّارِ

(**பொருள்:** இறைவா! இவரை மன்னிப்பாயாக. இவருக்கு அருள் புரிவாயாக. இவருக்கு நற்சுகம் அளிப் பாயாக. மேலும் இவரைப் பொறுத்தருள்வாயாக. இவரது விருந்துபசாரத்தைக் கண்ணியப் படுத்துவாயாக. இவர் புகும் இடத்தை (மண்ணறையை) விரிவாக்குவாயாக. இவரைத் தண்ணீர், பனி, பனிக்கட்டியைக் கொண்டு

கழுவுவாயாக. பாவங்களிலிருந்து இவரைத் தூய்மை யாக்குவாயாக. எவ்வாறு வெண்ணிற ஆடையை அழுக்கு களிலிருந்து தூய்மையாக்கினாயோ அவ்வாறு. இவரது வீட்டிற்குப் பகரமாகச் சிறந்த வீட்டையும் இவரது குடும்பத் தாருக்குப் பகரமாக சிறந்த குடும்பத்தார்களையும் இவரது மனைவிக்குப் பகரமாக சிறந்த மனைவி யையும் இவருக்கு வழங்குவாயாக. மேலும் இவரைச் சுவனத்தில் பிரவேசிக்கச் செய்வாயாக. மண்ணறையின் வேதனையிலிருந்தும் அல்லது நரகத்தின் தண்டனை யிலிருந்தும் இவரைக் காப்பாயாக.)

**வித்ரு தொழுது முடித்தவுடன்**

"சுப்ஹான மலிகில் குத்தூஸ்" سُبْحَانَ الْمَلِكِ الْقُدُّوسِ என்று மூன்று தடவை கூற வேண்டும். மூன்றாவது தட வையில் சப்தத்தை உயர்த்திச் சொல்ல வேண்டும். (நஸயீ 1732)

**இஸ்திகாரா- நன்மையை நாடித் தொழும்போது**

இரண்டு ரக்அத் தொழுது விட்டு பிறகு பின்வரும் துஆவை ஓத வேண்டும்.

அல்லாஹும்ம இன்னீ அஸ்தகீருக பிஇல்மிக வஅஸ் தக்திருக பிகுத்ரதிக வஅஸ்அலுக மின் ஃபழ்லிகல் அழீம் ஃபஇன்னக தக்திரு வலாஅக்திரு வதஃலமு வலா அஃலமு வஅன்த்த அல்லாமுல் ஃகுயூப், அல்லாஹும்ம

இன்குன்த்த த.ٰ.லமு அன்ன ஹாதல் அம்ர கைய் ருன்லீ ٰ.பீ தீனீ வமஆஷீ வஆகிபதி அம்ரீ அவ் ٰ.பீ ஆஜிலி அம்ரி வஆஜிலிஹி ٰ.பக்துர்ஹு லீ வயஸ்ஸிர்ஹு லீ, ஸும்ம பாரிக்லீ ٰ.பீஹி, வஇன் குன்த்த த.ٰ.லமு அன்ன ஹாதல் அம்ர ஷர்ருன்லீ ٰ.பீ தீனீ வமஆஷீ வஆகிபதி அம்ரீ அவ் ٰ.பீ ஆஜிலி அம்ரி வஆஜிலிஹி ٰ.பஸ்ரி ٰ.ப்ஹு அன்னீ வஸ்ரி.ٰ.ப்னீ அன்ஹு, வக்துர்லீ அல்கைர ஹைஸு கான ஸும்ம ரள்ளினீ பிஹி. (புகாரி 6382)

اللَّهُمَّ إِنِّي أَسْتَخِيرُكَ بِعِلْمِكَ وَأَسْتَقْدِرُكَ بِقُدْرَتِكَ وَأَسْأَلُكَ مِنْ فَضْلِكَ الْعَظِيمِ فَإِنَّكَ تَقْدِرُ وَلَا أَقْدِرُ وَتَعْلَمُ وَلَا أَعْلَمُ وَأَنْتَ عَلَّامُ الْغُيُوبِ اللَّهُمَّ إِنْ كُنْتَ تَعْلَمُ أَنَّ هَذَا الْأَمْرَ خَيْرٌ لِي فِي دِينِي وَمَعَاشِي وَعَاقِبَةِ أَمْرِي أَوْ فِي عَاجِلِ أَمْرِي وَآجِلِهِ فَاقْدُرْهُ لِي وَإِنْ كُنْتَ تَعْلَمُ أَنَّ هَذَا الْأَمْرَ شَرٌّ لِي فِي دِينِي وَمَعَاشِي وَعَاقِبَةِ أَمْرِي أَوْ فِي عَاجِلِ أَمْرِي وَآجِلِهِ فَاصْرِفْهُ عَنِّي وَاصْرِفْنِي عَنْهُ وَاقْدُرْ لِي الْخَيْرَ حَيْثُ كَانَ ثُمَّ رَضِّنِي بِهِ

(பொருள்: இறைவா! உனது ஞானத்தைக் கொண்டு உன்னிடம் நன்மையை யாசிக்கிறேன். உனது ஆற்ற லைக் கொண்டு வல்லமையை வேண்டுகிறேன். மேலும் உன்னிடம் உனது மகத்தான அருளை வேண்டுகிறேன். ஏனெனில் நீ ஆற்றல் பெற்றவன். என்னிடம் எந்த ஆற்ற

லும் இல்லை. நீ நன்கு அறிபவன். நான் எதையும் அறியாதவன். நீயே மறைவானவற்றை மிக அறிந்தவனா வாய். இறைவா! இந்தக் காரியம் (இங்கு தனது காரியத் தைக் குறிப்பிடுக.) எனக்கு- எனது தீனுக்கும், எனது வாழ்க்கைக்கும், எனது விவகாரத்தின் முடிவுக்கும், எனது உடனடியான, தாமதமான விவகாரத்திற்கும் நன்மை யானது என நீ அறிந்தால் அதை என் விதியில் சேர்த்து அதை எனக்கு எளிதாக்கி வைப்பாயாக! பின்பு அதில் எனக்கு பாக்கியம் அருள்வாயாக. இந்தக் காரியம் எனக்கு- எனது தீனுக்கும், எனது வாழ்க்கைக்கும், எனது விவகாரத்தின் முடிவுக்கும், எனது உடனடியான, தாம தமான விவகாரத்திற்கும் தீமையானது என நீ அறிந்தால் என்னை விட்டும் அதையும் அதை விட்டும் என்னையும் தடுப்பாயாக. மேலும் எனது விதியில் நன்மையைச் சேர்ப் பாயாக! அது எங்கிருந்தாலும் சரியே. பிறகு அதில் எனக்குத் திருப்தி ஏற்படுத்தித் தருவாயாக.)